பிலிப்பியர் 4:9

நீங்கள் என்னிடத்தில் எவைகளைக் கற்றும், பெற்றும், கேட்டும், கண்டுமிருக்கிறீர்களோ, அவைகளை யே செய்யுங்கள். அப்போது சமாதா னக் கடவுள் உங்களோடிருப்பார்.

சங்கீதங்கள் 32:8

பூமி முழுவதுங் கர்த்தருக்குப் பயப்படுவதாக! உலக வாசிகளெல் லாரும் அவருக்கஞ்சி நடுங்கக்கட வார்கள்.

தெசலோனிக்கேயர் 1 5:11

ஆனதால், நீங்கள் இப்போது செய்துவருகிறபடியே ஒருவரொருவரைத் தேற்றி, ஒருவரொருவருக்கு நன்மாதிரியாயிருங்கள்.

பழமொழியாகமம் 3:11-12

ஆண்டவருடைய கண்டிதத்தை என் மகனே! நீ தள்ளிவிடாதே; அவ ரால் கண்டிக்கப்படுகையிலுஞ் சோர்ந்து போகாதே (எபி.12:5; காட்சி.3:19). ஏனெனில், ஆண்டவர் தாம் சிநேகிக்கிறவனைக் கண்டிக்கிறார்; தகப்பன் தன் மகளில் சந்தோஷிப் பதுபோல் அவருஞ் சந்தோஷிக் கிறார்.

பழமொழியாகமம் 1:7

தேவ பயமே ஞானத்தின் ஆதி யாம்; மதியீனர் ஞானத்தையும், போதனையையும் புறக்கணிக் கிறார்கள் (சங்.110:10; சர்வ.1:16).

சங்கீதங்கள் 25:4

நான் வீணருடைய ஆசனத்தில் உட்கார்ந்தவனுமல்ல; தோஷம் செய்பவரிடத்தில் சேர்வதுமில்லை.

சங்கீதங்கள் 25:8-9

ஆண்டவரே! உமது வீட்டின் அலங்காரத்தையும் உமது மகிமை விளங்கச் செய்யும் இடத்தையும் விரும்பினேன். சர்வேசுரா! என் ஆத்துமாவை அவபத்தியுள்ளவர்களோடும், என் சீவனை இரத்தப்

பிரியரோடும் போக்கடியாதேயும்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 11:29-30

என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவனாயிருக்கி றேனென்று என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்கள் ஆத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்கள். (எரே. 6:16.) ஏனெனில் என் நுகம் இனிதாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (1 அரு. 5:3.) மூ 30. சேசுநாதர்சுவாமியுடைய கட்டளையெல்லாம் தேவசிநேகம் பிறர்சிநேகங்களில் அடங்கியிருக்கிறதினாலேயும், சிநேகமானது எல்லாவற்றையும் இன்பமாக மாற்றுகிறதினாலேயும் சேசுநாதர்சுவாமி: என் நுகம் இனிது, என் சுமை இலகுவானது என்கிறார்.

சங்கீதங்கள் 25:5

பொல்லாதவர்களுடைய கூட்டத்தை நான் பகைத்தேன்; அவ பத்தியுள்ளவர்களோடு நான் உட்கார மாட்டேன்.

கொலோசியர் 3:16

கிறீஸ்துநாதருடைய வாக்கியம் உங்களிடத்தில் சம்பூரணமாய்ச் சகல ஞானத்தோடுங் குடிகொண்டிருக்கக்கடவது. அப்படியே நீங்கள் ஒருவரொருவருக்குப் போதித்து, புத்தி சொல்லி, சங்கீதங்களிலும், கீர்த்தனைகளிலும், ஞானப்பாட்டுகளிலும் சர்வே சுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரங் களை உங்கள் இருதயங்களில் பாடிக் கொண்டுவாருங்கள்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 28:19-20

ஆகையால் நீங்கள் போய், சகல ஷஜாதி ஷஜனங்களுக்கும் உபதேசித்து: பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத் தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, (மாற். 16:15.) நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ நான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேனென்று திருவுளம்பற்றினார். மூ 20. அப்போஸ்தலர்கள் மரிப்பார்களென்று சேசுநாதர் அறிந்திருந்தும், உலக முடியுமட்டும் அவர்களோடுகூடத் தாமிருக்கிறதாகச் சொல்லுகிறபடியால், அப்போஸ்தலர்களுடைய மரணத்துக்குப்பின், அவர்களுடைய ஸ்தானத்திலே இருக்கிறவர்களோடும் சேசுநாதர் சுவாமி வசிக்கிறாரென்று சொல்லவேண்டியது. அப்போஸ்தலர்களுடைய ஸ்தானங்களும் உலகமுடியுமட்டும் நிலைநிற்குமென்று நிச்சயமாயிருக்கிறது.

தீத்துவுக்கு எழுதிய நிருபம் 2:1

நீரோ, குணமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசும்.

அருளப்பர் முதல் நிருபம் 2:27

அவராலே நீங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகம் உங்களிடத்தில் நிலைத்திருப்பதாக. அப்பொழுது ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டிய தில்லை. அவருடைய அபிஷேகம் சகலத் தையும்பற்றி உங்களைப் படிப்பிப்பதி னாலே, அந்தப் படிப்பினை உண்மையுள் ளதும் பொய்யற்றதுமாயிருக்கின்றது. அது உங்களைப் படிப்பித்தபடியே அவரிடத்தில் நிலைக்கொள்வீர்களாக.

இசாயாஸ் ஆகமம் 26:9

என் ஆத்துமமானது இரவில் உம்மை அபேட்சித்தது; நானும் அதி காலையே என் புத்தியுள்ள உள்ள முடன் உம்மை நோக்கி விழித்திருப் பேன்; (பூதல வாசிகள் அப்படியல்ல,) நீர் பூமிமீது நீதி செலுத்தியபின்னர் தான் நீதியாயிருக்கத் தேடுவர்.

சங்கீதங்கள் 143:10

அரசர்களுக்கு இரட்சணியங் கொடுக்கிறவரே! உமது தாசனாகிய தாவீதைப் பெரும் பட்டயத்திலிருந்து விடுதலையாக்கினவரே! என்னை இரட்சியும்.

பழமொழியாகமம் 4:11

நான் உனக்கு ஞானத்தின் மார்க்கத்தைக் காண்பிப்பேன்; நேர் மையின் மார்க்கங்களில் உன்னை நடத்துவேன்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:26

ஆனால் என் நாமத்தினாலே பிதாவானவர் அனுப்பப்போகிற தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பித்து, நான் உங்ளுக்குச் சொன்ன யாவற்றை யும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 7:16

சேசுநாதர் அவர்களுக்கு மறு மொழியாக: என் போதகம் என்னுடைய தல்ல, என்னை அனுப்பினவருடையதா யிருக்கின்றது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:20

பிரயோசனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், பிரசித்தமாயும் அந்தந்த வீடுகளிலும் உங்களுக்கு அறிவித்துப் போதித்தேன்.